பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 26 | திங்கட்கிழமை | 10.03.2025 | அதிர்வு 218

## கோர விபத்தில் மூவர் மரணம்!

(க.மகாதேவன்)

சிலாபம் – மாதம்பை, கலஹட்டியாவ சந்திக்கு அருகில் நேற்று இரவு இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

06▶





# உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் அநுர அரசின் ஆட்டம் முடிவுக்கு!

## இப்படிச் சொல்கின்றது சஜித் அணி

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் ஆட்டம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் நிறைவுக்கு வரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

06▶

# பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் திருப்தியான ஒதுக்கீட்டை வழங்குங்கள்

## தேர்தல் ஆணையாளர் நாயகம் வேண்டுகோள்

“வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கலின்போது தமது சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களில் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் போதுமான ஒதுக்கீட்டை வழங்க வேண்டும். மார்ச் 20 ஆம் திகதிக்குப் பின்னரே வாக்கெடுப்பு திகதி அறிவிக்கப்படும்.”

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து ஊடகங்களுக்குக்

06▶







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்று முடிந்துவிட்டது.

நடக்கப் போகும் உள்ளூராட்சித் தேர்தலில் தலைநகர் கொழும்பிலும் போட்டியிடுவது குறித்து கட்சியின் கொழும்புக் கிளை முன் முயற்சிகளை எடுத்த போதிலும், இம்முறை தேர்தலில் தமிழரசு கொழும்பில் போட்டியிடாது என்பதை ஓரிரு தினங்களுக்கு முன்னர் கோடி காட்டியிருந்தேன். அதுவே நேற்றைய கூட்டத்தின் தீர்மானமாக வந்துள்ளது.

கட்சிக் கட்டுப்பாடு தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகள் எடுப்பதற்கான முன்னாயத்தங்கள் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன. கட்சியை கட்டுக்கோப்பாக மாற்றுவதில் புதிய பதில் பொதுச் செயலாளர் சுமந்திரனும், புதிய பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் தீவிரமாக இருக்கின்றனர் என்று தெரிகிறது. அதை ஒட்டி நேற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அவை பற்றி பத்திரிகையாளர்

06▶



# வடக்கில் 3,557 ஆசிரியர்கள் பதவிகள் நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் 18 ஆயிரத்து 983 ஆசிரியர்கள் தேவையானபோதும் தற்போது 15 ஆயிரத்து 426 ஆசிரியர்களே பணியில் இருக்கின்றனர் என வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் தெரிவிக்கின்றது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஓர் விண்ணப்பத்திற்கான பதிலிலேயே இதனை கல்வித் திணைக்களம் தெரிவித்துளது.

வடக்கின் 13 கல்வி வலயங்களிலும் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 18 ஆயிரத்து 983 பேர். இருந்தபோதும் தற்போது 15 ஆயிரத்து 426 ஆசிரியர்களே பணியில் உள்ளனர். வடக்கில் 3 ஆயிரத்து 557 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை உள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு 2 ஆயிரத்து 455 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளபோதும் பணியில் 2 ஆயிரத்து 194 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதனால் 261 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது. வலிகாமம் கல்வி வலயத்திற்கு 2 ஆயிரத்து 762 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளபோதும் தற்போது 2 ஆயிரத்து 264 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இங்கே 498 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

வடமராட்சி கல்வி வலயத்திற்கு 1,735 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளபோதும் பணியில் 1,402 ஆசிரியர்கள் உள்ளதனால் 333 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகிறது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 1,066 ஆசிரியர்களிற்கு 877 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதனால் இங்கே 189 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதேபோன்று தீவக கல்வி வலயத்திற்கு 1,019 ஆசிரியர்களிற்கு 797 ஆசிரியர்களே உள்ளனர். இங்கும் 222 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தைப் பொறுத்த மட்டில் 662 ஆசிரியர்ளிற்கு 565 ஆசிரியர்கள் உள்ளனர். இங்கே 97 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளது.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு 1,622 ஆசிரியர்களிற்கு 1,341 ஆசிரியர்களே உள்ளனர் இங்கும் 281 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர்.

மன்னார் கல்வி வலயத்திற்கு 1,648 ஆசிரியர்கள் தேவை. இங்கே 1,196 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதனால் இங்கு 452 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகிறது.

மடுக் கல்வி வலயந்தில் 834 ஆசிரியர்களிற்கு 618 பேர் பணியில் இருப்பதனால் இங்கே 216 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.




இவ்வாறே வவனியா வடக்கு கல்வி வலயத்திற்கு 1,013 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளபோதும் பணியில் 777 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். 236 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 1,805 ஆசிரியர்களிற்காக 1,522 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். 283 ஆசிரியர்களிற்கான வெற்றிடம் அங்கு காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு 1,516 ஆசிரியர்கள் தேவையுள்ளபோதும் தற்போது 1,198 ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றுவதனால் 318 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை நிலவுகின்றது. துணுக்காய் கல்வி வலயத்தில் 846 ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டியபோதும் தற்போது 675 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இங்கும் 171 ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் வடக்கின் 13 கல்வி வலயங்களில் வலிகாமம் கல்வி வலயத்தில் அதிகபட்சமாக 498 ஆசிரியர்களிற்கும், வடமராட்சி கல்வி வலயத்தில் 333 ஆசிரியர்களிற்கும், முல்லைத்தீவில் 318 ஆசிரியர்களிற்கும், தீவக கல்வி வலயத்தில் 222 ஆசிரியர்களிற்கும் பற்றாக்குறை உள்ளது.

# வடக்கு, கிழக்கின் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூலியாள்கள் போல் இருக்கிறார்கள் என்கிறார் சத்தியலிங்கம்




**(கி.வசந்தன்)**

வடக்கு – கிழக்கு மாகணத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களாக வந்த எங்களது நாடளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தேவைகளை கூட எங்களுக்கூடாக நிறைவேற்ற வேண்டிய கட்டத்தில் உள்ளார்கள். அவர்கள் அங்கு கூலியாள்கள் போல்தான் இருக்கிறார்கள். அவர்கள் பொம்மைகள் போலதான் உள்ளார்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டம் மட்டுமின்றி வடக்கு – கிழக்கில் பெரும்பாலான சபைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். இந்த தேர்தல் முறைமை என்பது சிக்கலான முறை. நாங்கள் வடக்கு மாகாணத்தில் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் புதுக்குடியிருப்பு, பூநகரி ஆகிய பிரதேச சபைகளை மாத்திரே ஒரு கட்சியாக அந்த நேரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஆட்சி செய்தோம்.

வவுனியாவில் எல்லா சபைகளிலும் பெரும்பான்மையான வட்டாரங்களைக் கைபற்றி இருந்தாலும் கூட நாங்கள் எதிர்கட்சியாகவே இருக்க வேண்டி இருந்தது. அதற்கு இந்த உள்ளூராட்சி தேர்தல் முறைமை காரணம்.

அதனால்தான் கடந்த உள்ளூராட்சி மன்றத்திற்குரிய வேட்புமனுக்கள் செய்த போது கட்சிக்குள் முடிவெடுத்தோம். தனித் தனிக் கட்சியாக போட்டியிட்டு ஒன்று சேர்ந்து ஆட்சி அமைப்போம் என்று. ஆனால் அதன் பின் நடந்த முடிவு உங்களுக்கு தெரியும்.

இம்முறை எமக்கு சவாலான உள்ளூராட்சி தேர்தல் நடைபெற இருக்கிறது.

பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று தனிப் பெரும் கட்சியாக ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதியின் கட்சி இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு – கிழக்கில் போட்டியிட வந்துள்ளார்கள். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள் வடக்கு – கிழக்கில் போட்டியிடவில்லை.

எனவே, எமது வேட்பாளர்களின் செயற்பாடுகள் அதில் தாக்கம் செலுத்தும். அரசியல் ரீதியாக கொள்கை, ரீதயாக வேறுபாடுகள் இருந்தாலும் கூட, ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டியிடும் வேட்பாளர்தான் கட்சியின் வெற்றியை தீர்மானிக்கப் போகின்றார். இதனால் நாம் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம்.

வவுனியா மாவட்டம் மிகவும் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு மாவட்டம். எமது மாவட்டத்தில் இனப் பரம்பலை மாற்றக் கூடிய வகையில் பல பிரச்ச்ஜனைகள இடம்பெறுகின்றன. எங்களது மக்களது காணிகள் அபகரிக்கப்படுகின்றன. பல திணைக்களங்கள் எமது காணிகளை கையகப்படுத்துகின்றன. எமது இடம்பெயர்ந்த மக்கள் குடியேற முடியாத நிலை இருகிறது. வன்னி தேர்தல் மாவட்டத்திலும் இருப்பை காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்து வருகின்றோம்.

அந்த வகையில் நாடாளுமன்றத்திலும்நானும்,ரவிகரனும்குரல்கொடுத்து வருகின்றோம். அமைச்சர்களோடு பழகி வருகின்றோம். எமது மக்கள் சார்ந்த செயற்பாடுகளுக்காக அவர்களுடன் சண்டை பிடிக்கவில்லை. தவறுகள கூறுகின்றோம். பல வாக்குறுதிகளை தந்துள்ளார்கள். சில நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆனால், வடக்கு – கிழக்கு மாகணத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களாக வந்த எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தேவைகளை கூட எங்களுக்கூடாக நிறைவேற்ற வேண்டிய கட்டத்தில் உள்ளார்கள். அது ஒரு பரிதாபமான விடயம். அவர்களுக்கான குரல் அங்கு ஒலிப்பதற்கு இடமில்லை. அவர்கள் அங்கு கூலியாள்கள் போல் தான் இருக்கிறார்கள்.

வடக்கு–கிழக்குஆளும்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்கள் பொம்மைகள் போல தான் உள்ளார்கள். அதுதான் யதார்த்தம். உண்மை. அண்மையில் கருத்து வெளியிட்ட ஊடகம் ஒன்று தரப்பட்டியில் வடக்கு கிழக்கு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள் எனக் காட்டியது. எவ்வாறு இருந்தாலும் எமக்கு சவால் மிக்கது இந்த தேர்தல். அதை மனதில் வைத்து செயற்பட வேண்டும். எனத் தெரிவித்தார்.



# தமிழரசின் வவுனியா அலுவலகத் திறப்பு விழா நிகழ்வில் சிறிதரன் எம்.பி. பங்குபற்றவில்லை

(கி.வசந்தன்)

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றபோது அதில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், அது முடிந்த கையோடு இடம்பெற்ற கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகத் திறப்பு விழா நிகழ்வை புறக்கணித்து, வெளியேறிச் சென்றார்.



இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் காலை 10 மணி முதல் மதியம் வரை நடைபெற்றது. அதில் கட்சியின் முக்கிய உறுப்பினரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரனும் கலந்து கொண்டிருந்தார்.

மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்த பின் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகமும், நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் தொடர்பாடல் அலுவலகமும் குருமன்காடு, காளி கோவில் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், க.கோடீஸ்வரன், ஞா.சிறிநேசன், குகதாசன், சிறிநாத், இ.சாணக்கியன், கொழும்பு கிளைத் தலைவர் இரட்னவடிவேல் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், மாவட்ட கிளையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளாது மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் வெளியேறிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.








# யாழ்ப்பாண போதனா மருத்துவமனை மன்றம்

## பதவி வெற்றிடங்கள்
## நோயாளர் நட்புறவாளர் (BEFRIENDER)பதவி

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையினை நாடும் நோயாளிகளின் அடிப்படை தேவைகளை இலகுபடுத்தி நோயாளரின் சுகாதார நலன் பெறுதலை வினைத்திறனாக்கும் நட்புறவாளர்(Befriender) சேவை திட்டத்தில் இணைந்து கொள்ள ஓர் வாய்ப்பு.

## விண்ணப்பதாரர்கள்

மருத்துவம், உளவள ஆலோசனை சார்ந்த துறையில் கற்கையினை (NVQ 3 Level) பூர்த்தி செய்தவர்கள் அல்லது அதே துறையில் குறைந்தது 3 வருட அனுபவத்துடன் சமூக சேவை பின்னனணி உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்

## பயிற்சி

முதல் இரண்டு வாரங்கள் பணி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பொருத்தமான ஊதியம் வழங்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்கள் சுயவிபரக்கோவையினை கீழுள்ள முகவரிக்கு முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

- முடிவுத்திகதி: 15/03/2025

தொடர்புக்கு:

- 0094770024334
- http://thejthf.com
- thejthf2023@gmail.com
- இல.69,புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநாட்டில் அதிகம் வெளிப்படுத்தப்படவில்லை என்றே தெரிகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராக போட்டியிட்டவர்களும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் பெரும்பாலும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள். இத்தகையோருக்கு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் கட்சி இடமளிக்காது என்பது திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆயினும், ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக் கட்சி போட்டியிடாத போதிலும், கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டவர்கள் தொடர்பில் சில இடைக்கால நெருக்குவாரங்களை விதிப்பதற்கு கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. கட்சியின் முடிவை மீறி ஜனாதிபதி தேர்தலில் பிரசாரம் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் இடம் அளிப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அத்தகையோர் தங்களுடைய அந்த நடவடிக்கைக்காக கட்சியிடம் மன வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோர வேண்டும். மீண்டும் அப்படி நடக்க மாட்டார்கள் என்று உறுதியளிக்க வேண்டும். அப்படி மன வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோரும் கடித நகல் கட்சியினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும். அதனைப் பெற்றுக் கொண்டு அவர்கள் அதன்படி கடிதம் ஒன்றைத் தயாரித்து ஒப்பமிட்டுக் கட்சிக்கு வழங்கிய பின்னரே அத்தகையோருக்கு தேர்தலில் இடம் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்த விடயம் குறித்து நேற்று கட்சியின் மத்திய குழுவில் முடிவு எடுக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. ஆயினும், 'இந்த விடயத்தில் பெரிய முதலைகள் தப்பிப் போக, சிறிய நெத்திலிகளுக்கு எதிராக மட்டும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக' மத்திய குழு உறுப்பினர் சயந்தன் நேற்றுச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் அரசமைப்புக் கவுன்ஸிலுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அங்கு அவர் எடுக்கின்ற நடவடிக்கைகளும் தீர்மானங்களும் அவரது சொந்த முடிவுகளாக இருந்தாலும், அவை தொடர்பில் கட்சியின் அடிப்படை நிலைப்பாட்டை அவர் புரிந்து கொள்ள வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம், லஞ்சம்,ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் இயக்குனர் நாயகம் நியமனம் போன்றவற்றில் சிறிதரன் அரசாங்கத்தோடு சேர்ந்து வாக்களித்து, அரசின் முடிவை கவுன்ஸில் தீர்மானமாகப் பெற உதவியமை குறித்து கூட்டத்தில் சிலர் அதிருப்தி தெரிவித்தனர். ஆயினும் அத்தகைய முடிவு எடுக்கும் தனி உரிமை சிறிதரனுக்கு உண்டு என்பது கட்சி வட்டாரங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனாலும் கட்சியின் பிரதான நிலைப்பாட்டுக்கு மாறான வகையில் அவர் அரசுடன் சேர்ந்து இந்த விடயத்தில் செயற்படக்கூடாது என்றும் சிலர் வற்புறுத்தினர்.

உள்ளூராட்சி சபை வேட்பாளர் நியமனங்களை மாவட்டக் குழுக்களே கையாள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் தனித்து நியமனக் குழு எதுவும் நியமிக்கப்படவில்லை. மாவட்டக் குழு மட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படும். அவற்றை செயலாளர் தலைவருடன் சேர்ந்து ஒன்றிணைப்பதன் மூலம் வேட்பாளர் தெரிவை சுமுகமாக்க வேண்டும் என நேற்றைய கூட்டத்தில் பேசப்பட்டதாக அறிய வந்தது.

---

## கோர விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஓட்டோவும் பஸ்ஸூம் மோதியதில் ஓட்டோவில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு பெண்களும், ஒரு வயது குழந்தையும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## உள்ளூராட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

"கடந்த தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் பல தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்தவகையில் இம்முறைத் தேர்தலிலும் எம்மால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

ஆட்சியில் உள்ள அரசின் எதிர் காலத்தைத் தீர்மானிப்பதாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமையும். 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

இதற்கு முன்னரும் இவ்வாறான முடிவுகள் பதிவாகியிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு வெளியேறுமளவுக்கு புத்திசுயாதீனமற்றவர்கள் எமது கட்சியில் இல்லை. ஆனால், ஊழல், மோசடியற்ற எவரும் எம்முடன் இணையலாம். ஜே.வி.பி.யைத் தவிர வேறு எந்தக் கட்சியில் இருப்பவர்களுக்கும் அதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

தற்போது பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தின் மனித வளங்களே நாடாளுமன்றத்தில் உள்ளன. அவர்களால் சுயமாகச் செயற்பட முடியாது. பெலவத்த அலுவலகத்தின் கட்டளைகளுக்கமையவே செயற்படுவர்.

எனவே, உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களையும் அவ்வாறு தெரிவு செய்து விட வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைப்பவர்களுக்கு வாக்களிக்காமல் மக்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சுகள் தோல்வியடையவில்லை. அதே வேளை, பிறிதொரு கட்சியுடனான கூட்டணி குறித்த பேச்சுகள் துரிதமாக நிறைவடையக் கூடியவையும் அல்ல.

எமது பேச்சுகள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்டதும் அல்ல. அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டது.

எனவே, பேச்சுகளை அவசரமாக நிறைவு செய்யாது பொறுமையாக முன்கொண்டு செல்வோம். அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் எம்முடன் இணையலாம். சிலர் அதனை நிராகரிக்கலாம். தற்போது எதையும் உறுதியாகக் கூற முடியாது." - என்றார்.

## பெண்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2025 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதற்கமைவாக தற்போது அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களால் கட்டுப்பணம் வைப்பிலிடப்படுகின்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி (திங்கட்கிழமை) முதல் 20 ஆம் திகதி (வியாழக்கிழமை) நண்பகல் வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான அறிவிப்புக்கள் மற்றும் ஆலோசனைகள் சகல தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளன.

336 பிரதேச சபைகளுக்குத் தொகுதி அடிப்படையில் 4 ஆயிரத்து 872 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இம்முறை தேர்தல் நடத்தப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பின் பிரகாரம் 1 கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் தற்போது கோரப்படுகின்றது. நாளைமறுதினம் (12) விண்ணப்பக் கோரல் நிறைவடையும். ஆகவே, சரியான தகவல்களுடன் விண்ணப்பிக்குமாறு தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள அரச உத்தியோகத்தர்களிடம் வலியுறுத்துகின்றோம்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுத் தாக்கலின் போது பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு மற்றும் இளைஞர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

புதிய ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக போட்டியிட உத்தேசித்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் வேட்புமனுப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்போது தமது சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2023 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்கத் தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் வேட்புமனு நிறைவடைந்து ஓரிரு நாட்களில் தேர்தல் பிரச்சார செலவு தொடர்பில் அறிவிக்கப்படும்.

இந்த விடயம் குறித்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுடன் விரிவாகக் கலந்துரையாடுவோம்.

ஏனைய தேர்தல்களை காட்டிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பணிகள் விரிவானவை. ஆகவே, வாக்கெடுப்பு தொடர்பான திகதி எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னரே அறிவிக்கப்படும்."

- என்றார்.


எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...
செந்தியின்
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
Since 1996
416-615-4646
info@tamilsguide.com
www.tamilsguide.com


GET READY!
MEGA BLAST
BIGGEST SUMMER EVENT
IS BACK..
CONTACT US TO GET INVOLVED AS A
SPONSOR
VOLUNTEER
VENDOR
SCARBOROUGH FAIRGROUNDS
MORNINGSIDE AND FINCH

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒரே குட்டையின் மட்டைகள்!

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் இந்த 76 ஆண்டுகளாக இந்த நாட்டின் அதிகாரத்திலிருந்த அரசுகளின் ஆட்சி முறைமையினால்தான் நாடு இந்தக் கேவல நிலைக்கு வந்ததாக விமர்சித்து, அந்த விமர்சனத்தின் அடிப்படையில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு.

இதுவரை காலமும் முன்னைய அரசுகளின் தவறுகள் பற்றிய விமர்சனம் ஒன்றுதான் இந்த அரசின் சாதனையாக நீடித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால், இதற்கு முன்னர் அதிகாரத்திலிருந்த அரசுகளிலிருந்து இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு மாறுபட்டதாக கருதுவதற்கு அல்லது ஆட்சி முறைமையில் மாற்றம் செய்த நிர்வாக பீடமாக அதை எண்ணுவதற்கு எதுவும் இல்லை என்பதுதான் யதார்த்தப் புறநிலையாகும்.

முன்னைய அரசுகள் போன்று இதுவும் குளறுபடித்தனம் மிக்கதுதான் என்பதை ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க வெளிப்படுத்துகின்றார்.

முன்னைய அரசுகளின் ‘டீல்’ முறைதான் இந்த அரசிலும் நீடிக்கின்றது என்று அவர் குற்றம் சாற்றுவதில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

தலைமறைவாகியுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னைக்கோன் தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் கருத்து - தகவல் - முன்னைய ஆட்சி பீடக் கட்டமைப்பிலிருந்து இந்த ஆட்சியின் தலைமையும் வேறுபட்டது அல்ல, ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தானம் என்ற கருத்தை தருவதாகவே உள்ளது.

“தேசபந்து தென்னகோனை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் இதுவரையில் அவர் கைது செய்யப்படவில்லை. எங்கோ தலைமறைவாகியுள்ளார். தேசபந்துவின் பின்னணியில், முன்னைய அரசில் அவருடன் இயைந்து செயற்பட்ட முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளார். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, டிரான் அலஸிற்கு எதிராக செயற்படமாட்டார். இதனால்தான் தேசபந்து தென்னகோன் பாதுகாக்கப்படுகிறார். அத்துடன் வி.எவ்.எஸ். விசா கொடுக்கல் வாங்கல் ஊழல் மோசடி தொடர்பில் டிரான் அலஸிற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இவர்கள் அனைவரும் நண்பர்கள். இவர்களின் ‘டீல்’ அரசியலை நாங்கள் நன்கு அறிவோம்.” - என்று கூறியிருக்கின்றார் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

உண்மைதான். முன்னைய அரசில் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஒட்டி குடிவரவு, குடியகல்வு ஆணையாளர் நாயகம் உயர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இன்னமும் விளக்கமறியலில்தான் இருக்கின்றார். அதுவிடயத்தில்பிரதானமாகசம்பந்தப்பட்ட பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸூக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

டிரான் அலஸினுடைய பாதுகாப்பில்தான் தேசபந்து தென்னக்கோன் அடைக்கலம் பெற்றுப் பாதுகாப்பாக இருக்கிறார் என்று தெற்கில் பேசப்படுகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது முன்னைய அரசுகளின் ‘டீல்’ அரசியலில் இருந்து இப்போதைய அரசுத் தலைமையும் வேறுபட்டது அல்ல என்ற சிந்தனைதான் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றது.

ஸீஸரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். அது போல முன்னைய 76 ஆண்டுகால அரசுகளையும் தாறுமாறாக விமர்சிக்கும் இந்த ஆட்சித் தலைமையும் தன்னை நேர்மையானதாக - உண்மையானதாக - நீதி, நியாயம் மிக்கதாக - சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக - காட்டிக் கொள்வது அவசியம். ஆனால் களத்தில் நடக்கும் நிகழ்வுகளோ, இந்த ஆட்சிப் பீடமும் முன்னைய ஆட்சிப் பீடங்களில் இருந்து வேறுபட்டது அல்ல, ஒரே குட்டையில் ஊறியதுதான் என்ற சிந்தனையைத் தருவனவாகவே இந்த ஆட்சி பீடத்தின் நடவடிக்கைகள் அமைந்திருப்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

# 6 பிள்ளைகளின் தந்தையான மூதூர் வாசி பொலிஸாரால் மூர்க்கமாகத் தாக்கப்பட்டார்





(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாகப்பட்டார் என்று கூறப்படும் குமாரபுரத்தைச் சேர்ந்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூதூர் பொலிஸாரினால் குமாரபுரம் பகுதியில் வைத்து 6 பிள்ளைகளின் தந்தையான நாகராசா லிங்கேஸ்வரன் (வயது 44) என்பவரே கைது செய்யப்பட்டு பின்னர் தாக்கப்பட்டார் எனத் தெரிய வருகின்றது.

இந்த நபர் மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது சனிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலையில் மாற்றப்பப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கிளிவெட்டி குமாரபுரம் பகுதியில் 24.02.2025 அன்று ஏற்பட்ட விபத்துச் சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளில் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த நபரே கடந்த வெள்ளிக்கிழமை மூதூர் பொலிஸாரினால் குமாரபுரம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் சட்டத்திற்கு முரணான வகையிலும், அடிப்படை உரிமையை மீறும் வகையிலும் தனது கணவர் தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்து, தாக்கப்பட்ட தனது கணவனுக்கு நீதி கோரி அவரது மனைவியினால் வெள்ளிக்கிழமை திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர் மனித உரிமை அதிகாரிகள் நேரில் சென்று அவரைப் பார்வையிட்டமையுடன் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளனர்.

கடந்த 24.02.2025 அன்று குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தின் பின்னர் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக தெகிவத்தை பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமது கிராமத்திற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டிருந்தனர் எனவும் இதன்போது தமது கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தற்பாதுகாப்பிற்காக திருப்பி தாக்கியமையோடு தப்பியும் ஓடினார்கள் என்று கிராமத்தவர்கள் கூறுகின்றனர்.

இதன்போது அவ்விடத்திற்கு வருகை தந்த மூதூர் பொலிஸார் தெகிவத்தைப் பகுதியைச் சேர்ந்த 4 பேரையும், குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த 6 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இரு தரப்பிலும் சிலரை தேடியும் வந்தார்கள். பின்னர் இரு தரப்பினரும் சமாதானமான முறையில் இணக்கப்பாட்டுக்கு வந்த நிலையில் கடந்த 28.02.2025 அன்று கைது செய்யப்பட்ட அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை (7 ஆம் திகதி) பாலர் பாடசாலையில் பிள்ளையை விட்டு திரும்பி வரும் வழியில் மூதூர் பொலிஸார் தனது கணவனை ஓட்டோவில் அழைத்துச் சென்று அவரின் தலை, கை, கால் ஆகிய பகுதிகளில் மிகவும் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர் என மனைவி முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

அத்துடன் 30 பேருக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் எமது ஊருக்குள் வந்து தாக்குதல் மேற்கொண்ட போதும், வெறும் 4 பேரை மாத்திரம் கைது செய்து பிணையில் விடுவித்தும், ஏனையவர்களை கைது செய்யாமலும் குமாரபுரம் மக்கள் மீது தமது அதிகாரத்தை பிரயோகித்து ஒரு பக்கச் சார்பாக பொலிஸார் நடந்து கொள்கின்றனர் என திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் திருமதி லிங்கேஸ்வரன் முனீஸ்வரி என்ற அந்தப் பெண்மணியினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி; இந்திய அணி வெற்றி பெற்றது



சம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியில் இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

இதன்படி போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 251 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பில் டேரல் மிட்செல் 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் வருண் சக்கரவர்த்தி மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்தநிலையில், 252 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதன்படி 2025 ஆம் ஆண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றியுள்ளது.



# தேசிய மக்கள் சக்தியின் மகளிருக்கான ஒன்றுகூடல் வவுனியாவில் இடம்பெற்றது

(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் மகளிருக்கான ஒன்று கூடல் நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்கவின் பங்குபற்றுதலுடன் வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான ஒன்று கூடல் என்னும் தொனிப் பொருளில் இக் கலந்துரையாடல் முன்னெடுக்கச்ப்பட்டது.

இதன்போது, மகளிர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மகளிருக்கான அபிவிருத்தி செயன்முறைகள் மற்றும் வரவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் மகளின் பங்குபற்றல் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் சியானி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரான சமன்மலி குணசிங்க, பேராசிரியரும் விரிவுரையாளருமான ஜவதனா செல்வராஜ், வவுனியா பிரதேச செயலக மகளிர் அமைப்பு தலைவி ரவீந்திராஜ் சுலோஜினி, கட்சி வட்டார உறுப்பினர்கள், கட்சித் தோழர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.















# வடக்கு, கிழக்கில் மாற்று வலுவுடைய இருபது பேருக்கு இந்தியாவில் செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டன

யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தால் முன்னெடுக்கப்படும் மாற்று வலுவுடையவர்களுக்கான செயற்கை அவயவங்களைப் பொருத்தும் செயற்றிட்டத்தின்

கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 20 பயனாளர்களுக்கு இந்தியாவில் செயற்கை அவயங்கள் பொருத்தப்பட்டன.

கடந்த புதன்கிழமை இருபது பேரும் யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு புறப்பட்டு சென்று சிறப்பு செயற்றிட்ட முகாம் ஒன்றில் பங்கெடுத்தனர். அங்கு அவர்களுக்கான செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டன.

இந்நிலையில் இருபது பயனாளிகளும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள – யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு – செயற்கை அவயவங்களை வழங்குவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இந்த செயற்றிட்டமானது யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கே.செல்வகுமாரினால் ஆரம்பிக்கப்பட்டது. Canada Fund for Local Initiative மற்றும், Canada Sri Lanka Business Convention ஆகிய அமைப்புகளால் நிதி வழங்கப்படுகிறது.

இச்செயற்றிட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பேராசிரியர் செல்வகுமார், இந்தச் செயற்றிட்டத்துக்கு இடையூறாக எவரும் செயற்பட வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தார்.


இதேவேளை இந்தச் செயற்றிடம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பயனாளர்கள், உண்மையிலேயே இந்த செயற்றிட்டத்தின் மூலம் எமக்கு பெரிய உதவி கிடைத்துள்ளது. இதனை ஏனையவர்களும் பயன்படுத்த வேண்டும் – என்றனர்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் செயற்கை அவயவங்கள் உற்பத்தி மையம் ஒன்றை உருவாக்கவும், மாற்று வலுவுடையவர்களால் குறித்த மையம் நடத்தப்படவும் எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.









# தலைவர் பிரபாகரனின் வீரச்சாவு பற்றிய உத்தியோகபூர்வமான அறிவிப்பு இன்று

## சுவிஸில் வெளியிடப்படும் என்று செய்தி வெளியீடு

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வீரச்சாவு அறிவிப்பு இன்று உத்தியோக பூர்வமாக வெளியாகின்றது என "மேதகு வே.பிரபாகரன் நினைவெழுச்சி அகவம்" நேற்று சுவிஸில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் நாள் சுவிற்சர்லாந்து நாட்டில், தேசியத் தலைவரின் வழி நின்று களமாடிய போராளிகள், தேசிய செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்த ஒன்றுகூடலில், தலைவரின் வீரச்சாவை உறுதிப்படுத்தி வெளியிடப்பெற்ற தமிழீழ மாவீரர் பணிமனையின் அறிவிப்பு நாளை (இன்று) 10.03.2025 அன்று உத்தியோகபூர்வமாக வெளிவருகின்றது.

தலைவர் அவர்களின் வீரச்சாவினை உறுதிப்படுத்தும் அறிவிப்பானது காணொளிப் பதிவாகவும் அதேவேளை அறிக்கை வடிவிலும் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இத்தகவலை மேதகு வே.பிரபாகரன் நினைவெழுச்சி அகவத்தின் ஊடகப் பிரிவு அனைவருக்கும் அறியத்தருகின்றது.

# போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த தன் மகனுக்கு ஹெரோயின் வழங்க முயன்ற சப் இன்ஸ்பெக்டரான தந்தை கைது!



**(கி.வசந்தன்)**

வவுனியா, பூந்தோட்டம் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வரும் தனது மகனுக்கு ஹெரோயின் போதைப் பொருள் வழங்க முற்பட்டார் எனக் கூறப்படும் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

போதைப் பொருள் பாவனை தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய இளைஞர் ஒருவர் வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு 6 மாத புனர்வாழ்வுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தற்போது 4 மாதங்கள் நிறைவடையில் நிலையில் அந்த இளைஞரை பார்வையிடுவதற்காக குருநாகல் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குற்றத்தடுப்பு பிரிவில் சப் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றும் தந்தையும், பொலிஸாகக் கடமையாற்றும் தாயும் வருகை தந்துள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்திறகுள் சென்று தமது மகனை பார்வையிட்ட போது அவர்கள் இருந்த இடத்தை நோக்கி பொலிஸ் மேப்ப நாய் வந்ததை அவதானித்த அவர்கள் தமது பையில் இருந்த பொதி ஒன்றை எடுத்து வெளியே வீசியுள்ளனர். இதனை காவல் கடமையில் இருந்த பாதுகாப்பு தரப்பினர் அவதானித்துள்ளனர். உடனடியாக மோப்ப நாயின் உதவியுடன் அதனை சோதனையிட்ட போது அதில் 240 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மோப்ப நாய் அதனை வீசிய இளைஞரின் தந்தையான சப் இன்ஸ்பெக்டரையும் அடையாளம் காட்டிய நிலையில், அவர் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின் அந்த சப் இன்ஸ்பெக்டரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# 14 மீனவர்கள் கைது எதிரொலி பாம்பனில் வேலை நிறுத்தம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி பாம்பன் விசைப்படகு மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராமேசுவரம் அருகே பாம்பன் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற ஆரோக்கியம் என்பவரது விசைப்படகை இலங்கை கடற்படையினர் கைப்பற்றி படகிலிருந்த ஆரோக்கியம், செல்வம், ஜெயாஸ்டன், ஜோஸ்வா, சீமோன், முத்துராமன், முகிலன், ஆரோக்கியம், வால்டன், மாரிசெல்வம், ஜெயசூர்யா, ரிபாக்சன், தர்மன், விக்னேஸ்வரன் ஆகிய 14 மீனவர்களை கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்தனர்.

14 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு மார்ச் 14 வரையிலும் நீதிமன்ற காவலில் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களை சிறைப்பிடித்ததைக் கண்டித்தும், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுத்து வர வலியுறுத்தியும் நேற்று ஞாயிற்றுக் கிழமை பாம்பன் விசைப்படகு மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பாம்பனில் கடலுக்குச் செல்லாமல் மீன்பிடி இறங்குதளத்தில் 100 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நேற்று நங்கூரமிடப்பட்டிருந்தன.

## மணிப்பூரில் முழு அடைப்பு போராட்டம் குகி பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மணிப்பூரில் போராட்டக்காரர்கள் நடத்திய முழுஅடைப்புப் போராட்டத்தால் குகி இன மக்கள் வாழும் பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பாதுகாப்புப் படையினரின் அடக்குமுறையை எதிர்த்து குகி இனக்குழுக்கள் அழைப்பு விடுத்திருந்த காலவரையற்ற முழு அடைப்பு போராட்டத்தின் பகுதியாக இந்தப் போராட்டம் நடந்தது.


குகி இனமக்கள் அதிகம் வசிக்கும் சுரசந்த்பூர் மற்றும் தெங்கவுன்பால் மாவட்டங்களில் போராட்டக்காரர்கள் வீதிகளில் டயர்களை எரித்தும் கற்களைப் போட்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்பு அவை பாதுகாப்பு படையினரால் அப்புறப்படுத்தப்பட்டன. என்றாலும் இரு தரப்புக்கும் இடையில் புதிய மோதல் சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. குகி இன மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் வணிக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. வீதிகளில் சில வாகனங்கள் இயங்கின என்றாலும் மக்களை வெளியே வர வேண்டாம் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தியிருந்தனர். கடந்த சனிக்கிழமை வன்முறை வெடித்த காங்போக்பி மாவட்டத்தில் அமைதி நிலவினாலும் பதற்றம் நிலவியது.

முன்னதாக, மணிப்பூரில் கடந்த மே 2023 இனக்கலவரத்துக்கு பின்னர் சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை பஸ் போக்குவரத்துத் தொடங்கியது. மணிப்பூரில் இருந்து தங்களுக்கு தனி நிர்வாகம் ஏற்படுத்தும் வரை பொது போக்குவரத்தை அனுமதிக்க முடியாது என குகி சமூகத்தினர் ஏற்கெனவே அறிவித்திருந்த நிலையில் அவர்கள் பல இடங்களில் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். இந்த தடைகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு படையினரின் பாதுகாப்புடன் பஸ்கள் இயக்கப்பட்டன.

குகிசமூகத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் பல்வேறு இடங்களில் போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் மோதல் ஏற்பட்டது. காங்கோக்பியில் நடந்த மோதலில் போராட்டக்காரர் ஒருவர் உயிரிழந்தார். பெண்கள், காவலர்கள் உள்ளிட்ட 40 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.




## குடியரசு துணை தலைவர் வைத்தியசாலையில் சேர்ப்பு



குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் நெஞ்சு வலி மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

73 வயதான தன்கர், நேற்று அதிகாலை 2 மணியளவில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு, எய்ம்ஸ் மருத்துவமனை இதயவியல் துறைத் தலைவர் ராஜீவ் நராங்க் கண்காணிப்பில் தீவிர சிகிச்சை பிரிவில் (சி.சி.யு) அனுதிக்கப்பட்டார்.

குடியரசு துணைத் தலைவரின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், மருத்துவர்கள் அவரின் உடல்நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே, குடியரசு துணைத் தலைவரின் உடல்நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா, எய்ம்ஸ் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஜெகதீப் தன்கரின் உடல் நலம் குறித்து அறிய நேற்று டில்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றார். மருத்துவமனையில் ஜெகதீப் தன்கரின் குடும்பத்தினரிடமும் மருத்துவர்களிடம் உடல் நலம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி கேட்டறிந்தார்.

அத்துடன், ஜக்தீப் தன்கர் விரைவில் பூரண குணமடைய றைவனிடம் பிரார்த்திக்கிறேன் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.





# ஸ்டார்லிங்க் அமைப்பை முடக்குவேன் உக்ரைனுக்கு எலான் மஸ்க் எச்சரிக்கை

உக்ரைனிய இராணுவத்தின் முதுகெலும்பாக இருக்கும் தனது ஸ்டார்லிங்க் அமைப்பை தான் முடக்கினால் உக்ரைன் பாதுகாப்பு அமைப்பின் முழு முன்னணி வரிசையும் சரிந்துவிடும் என டொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய நண்பர் எலான் மஸ்க் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய மீதான உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கியின் நிலைப்பாடு தொடர்பில் எலான் மஸ்க் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வந்த நிலையில், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உக்ரைனின் இராணுவ தகவல் தொடர்புகளைப் பராமரிப்பதில் இன்றியமையாததாக ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணைய அமைப்பு காணப்படுகிறது.

2022 பெப்ரவரியில் ரஷ்யா படையெடுத்ததிலிருந்து உக்ரைனின் நிலையான இணைப்பு மற்றும் தொலைத்தொடர்பு வலையமைப்புகளும் குண்டு வீச்சினால் மோசமாக சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில், சேதமடைந்துள்ள தொலைதொடர்பு வலையமைப்புகளின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உக்ரைனுக்கு ஸ்டார்லிங்க் இணைய அமைப்பு உதவியுள்ளது.

தற்போது, அது அந்நாட்டின் சில பொதுமக்களுக்கும் கிடைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பிரதானமாக ஸ்டார்லிங்க் இணைய அமைப்பு உக்ரைனின் ஆயுதப் படைகளால் பயன்படுத்தப்படுகின்றன, அவை கடுமையான சமிக்ஞை நெரிசல் மற்றும் முன்னணி வரிசையில் தகவல் தொடர்புகளை அனுப்புவதற்கும் பெறுவதற்கும் உதவியாக இருக்கின்றன.

மேலும், உக்ரைன் இராணுவம் தாக்குதல் ட்ரோன்களை வழிநடத்த ஸ்டார்லிங்கையும் பயன்படுத்தியுள்ளது.

ஸ்பேஸ்எக்ஸ் உக்ரைனுக்கு ஸ்டார்லிங்கை வழங்க நிதியளிக்க உதவியது, பின்னர் அமெரிக்க அரசாங்கம் பொறுப்பேற்றது, இருப்பினும் கடந்த மாதம் போலந்து உக்ரைனின் ஸ்டார்லிங்க் கட்டணங்களை தொடர்ந்தும் செலுத்துவதற்கு முன்வந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், உக்ரைனிய இராணுவத்தின் முதுகெலும்பாக இருக்கும் தனது ஸ்டார்லிங்க் இணைய அமைப்பை முடக்கினால் உக்ரைன் பாதுகாப்பு அமைப்பின் முழு முன்னணி வரிசையும் சரிந்துவிடும் என எலான் மஸ்க் எச்சரித்துள்ளார்.




# பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம் அமெரிக்கர்களுக்கு அறிவுறுத்தல்

பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கர்களுக்கு அந்நாட்டு அரசு அறிவுறுத்தலை வழங்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்க்வா மாகாணங்களில் சமீப காலமாக பயங்கரவாத தாக்குதல் அடிக்கடி நடந்து வருகின்றது.

இதன் காரணமாகவே அமெரிக்கர்களுக்கு இவ் அறிவுறுத்தலை அந்நாட்டு அரசு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

"பயங்கரவாதம்மற்றும்ஆயுதமோதல்களுக்கான சாத்தியக்கூறுகள் காரணமாக பாகிஸ்தானுக்கு பயணம் செய்வதை மக்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

பலுசிஸ்தான், கைபர் பக்துன்க்வா மாகாணங்கள், இந்தியா – பாகிஸ்தான் எல்லை மற்றும் கட்டுப்பாட்டுக் கோட்டின் அருகிலுள்ள பகுதிகளுக்கு அமெரிக்கர்கள் பயணம் செய்ய வேண்டாம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.03.2025




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். பாடல்கள் கேட்பதன் மூலம் திருப்தியான மனநிலை காணப்படலாம். உங்கள் கோபத்தை பிறரிடம் காட்டாதீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று கவனச் சிதறல் காணப்படும். மனம் ஒருமித்து பணியாற்றினால் தான் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலும்.

நீங்கள் உங்கள் அணுகுமுறையில் களிப்புடன் இருக்க வேண்டும். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க சாதாரணமாகவும் தாராளமாகவும் இருக்க வேண்டும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். இன்று உங்கள் செலவுகளை நன்கு கண்காணித்து செலவுகளை தடுக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். முடிந்த அளவு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள்.

சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிக்க வேண்டும். பணியிலிருந்து கவனத்தை திசை திருப்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொழுது அமைதியை இழக்காதீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க இது மிகவும் முக்கியம்.

பணவளர்ச்சிக்கு சுமுகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக அதிக அளவில் பணம் செலவழிக்க நேரலாம்.

மனஅழுத்தம் காரணமாக அசௌகரியமாக உணர்வீர்கள். தியானம் மேற்கொள்வது நன்மை அளிக்கும்.




உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறை கூடாது. விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக நாட்டமும் ஈடுபாடும் உங்களுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும்.

உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணிகளைக் கையாள்வதில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையை நீங்கள் இன்னும் சிறந்த முறையில் புரிந்துகொள்ள வேண்டும். அவர் உங்களை புரிந்து கொள்ள அவகாசம் அளியுங்கள்.

பணம் சம்பந்தமான வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பொறுப்புகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவு செய்ய நேரும்.

முதுகுவலி காணப்படும். யோகா மேற்கொள்வது மிகுந்த பலனை அளிக்கும்.




இன்று சமநிலையுடன் காணப்படுவீர்கள். இன்று புதிய நணபர்கள் மற்றும் கூட்டாளிகள் கிடைப்பார்கள். இன்று அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் பணிகளில் மிகுந்த வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் பணிகளில் திருப்தி காணப்படும். புதிய வேலைக்கான வாய்ப்புகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இன்று உங்கள் துணையை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

பணம் சம்பந்தமான உங்கள் அதிர்ஷ்டத்திற்கு முயற்சிக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன. உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களை திடமாக வைத்திருக்கும் வலிமை உங்களிடம் காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் சாதாரண செயல்கள் இன்று உத்வேகம்அளிக்கும். நீங்கள் பெரிதாக சாதித்ததைப் போன்று உணர்வீர்கள்.

பணிகளில் மிகுந்த சவால்களை எதிர்கொள்ள நேரும். ஓய்வுக்கான நேரம் குறைவாக இருக்கும். உங்கள் பணிகளை முறையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சரியான முறையில் தொடர்பாடல் கொண்டிருப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். சரியான தொடர்பாடல் காரணமாக புரிந்துணர்வு அதிகரிக்கும்.

இன்று கணிசமான தொகை சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை அல்லது போனஸ் கிடைக்க வாய்ப்பு உள்ளது.




இன்று சாந்தமாக இருப்பது நல்லது. உங்கள் சபலங்களை இன்று கட்டுப் படுத்த வேண்டும்.

பணியில் இன்னும் நல்ல கவனம் செலுத்த வேண்டும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க அது உதவும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்க்க வேண்டும்.

குடும்பம் சம்பந்தமான காரியங்களுக்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் பணம் அதிக அளவில் செலவு செய்ய நேரும்.

சிறிய உடல்நலக் குறைவு ஒன்றிற்காக உங்கள் தாயாருக்கு மருத்துவ செலவு செய்ய நேரலாம்.




உங்கள் அன்றாட செயல்களை கவனமுடன் கையாள வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்காது. சகபணியாளர்களின் மூலம் சில தொந்தரவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் நீங்கள் குழப்பமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக காணப்படுவீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு அதனைத் தவிர்க்க வேண்டும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான பணம் மட்டுமே உங்களிடம் காணப்படும். கூடுதல் செலவுகள் அல்லது தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.

சளி இருமல் போன்ற ஒவ்வாமை நோய்களால் நீங்கள் பாதிக்கப்படலாம்.




இன்று வெற்றி எளிதாக கிடைக்கும். உங்கள் இணக்கமான தொடர்பாடல் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி உங்களை வெற்றியின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியான ஆச்சரியங்களை காண்பீர்கள். நீங்கள் செய்யும் பணியில் எல்லாவிதத்திலும் நீங்கள் மகிழ்ச்சியைக் காணலாம்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் காணப்படுவீர்கள். அவருடன் நட்பான அணுகுமுறையை மேற்கொள்வீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை பயனுள்ள வழியில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். உங்களின் நேர்மறை அணுகுமுறை மூலம் குறைவற்ற ஆரோக்கியம் சாத்தியமாகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.03.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

நீங்கள் மிகுந்த மனஅழுத்தத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் வெற்றியை அது தடுக்கும். உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்புடன் நடந்துகொள்ளுங்கள். இதை பராமரிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள். அதில் வளர்ச்சியும் காண்பீர்கள்.

தைரியத்துடனும் மன உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று குறைந்த அளவு நற்பலன்களே கிடைக்கும். வெற்றிக்கு முடிந்த அளவு முயலுங்கள். எப்பொழுதும் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் பணிகளை தொழில் சார்ந்த முறையில் அணுகுவீர்கள். உங்கள் திறமைகளுக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடனான உறவு சிறந்து காணப்படும். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பீர்கள்.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் நோக்கத்துக்குத் தடை ஏற்படும். முடிந்த அளவு பணத்தை சேமிக்க வேண்டும். முதுகுவலி மற்றும் சளித் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள்.




இன்று உங்களுக்கு தேவை தைரியம். கஷ்டகாலங்கள் கடந்து போகும் நல்ல நாட்கள் வரும் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். நம்பிக்கையை இழந்து விடாதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும் பணிகளை முன்னுரிமைப்படி வரிசைப்படுத்தி செயலாற்றினால் கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கலாம்.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அவருக்குத் துணையாக அவருடன் எப்பொழுதும் இருப்பீர்கள் என்று நம்பிக்கையளியுங்கள்.

எதிர்பாராத செலவினங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.





இன்று சிறப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் இருக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனத்துடன் இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் வளர்சியைத் தரும்.

பணியிடத்தில் இன்று பணியில் உங்களுக்கு ஆர்வம் அதிகரிக்கும். இன்று பணிகளில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். திருப்தியான நிலை காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் சாந்தமாக செயல்படுவீர்கள். உங்கள் துணையுடன் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் நேரத்தை செலவழித்து மகிழ்வீர்கள். இது மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

வெற்றியை நோக்கி செல்லும் மனமும் பணத்தை சேர்க்க வேண்டும் என்ற எண்ணமும் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

# விபத்துக் காயங்களுடன் யாழ் வைத்தியசாலையில் வருடாந்தம் ஐம்பது பேராவது உயிரிழக்கின்றனர்!






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் விபத்துக் காயங்களுடன் சேர்க்கப்படுவோரில் சராசரியாக ஐம்பது பேர் ஒவ்வொரு ஆண்டும் உயிரிழக்கிறமை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் தகவல் உத்தியோகத்தர் வழங்கிய புள்ளி விவரப் பதிலில் இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 424 பேர் காயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 64 பேர் மரணமடைந்துள்ளனர்.

2016 இல் 2 ஆயிரத்து 732 பேர் படுகாயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 52 பேர் மரணமடைந்தனர். 2017 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 530 பேர் படுகாயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 64 பேர் மரணமடைந்துள்ளனர். 2018இல் படுகாயங்களுடன் சேர்க்கப்பட்ட 2 ஆயிரத்து 672 பேரில் 72 பேர் மரணமடைந்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 624 பேர் காயமடைந்த நிலையில் 75 பேரும், 2020 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 557 பேரில் 46 பேரும், 2021 ஆம் ஆண்டில் ஆயிரத்து 604 பேரில் 81 பேரும் உயிரிழந்துள்ளனர்.

2022 இல் ஆயிரத்து 861 பேரில் 75 பேரும், 2023 இல் ஆயிரத்து 485 பேரில் 68 பேரும், 2024 ஆம் ஆண்டில் 1,988 பேரில் 59 பேரும் மரணமடைந்தனர் என யாழ். போதனா வைத்தியசாலை தெரிவிக்கின்றது.